**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 158/2022**

**வா.சா.1 – கந்தசாமி**

**<u>23-10-2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தானாக முன் வந்து அவரே செய்யும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

5. நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஓய்வாக வீட்டில் உள்ளேன். இதற்கு முன்பு நூல் மில்லில் வேலை செய்தேன். எனது தந்தையார் நூல் மில்லில் வேலை செய்தார். என்னுடன் பிறந்தவர்கள் 1 சகோதரர் 4 சகோதரிகள். என் மனைவி SSLC படித்துள்ளார். என் மனைவி சமூக நலத்துறையில் சமூக விரிவு அலுவலராக பணிபுரிந்தார். எனக்கு 1 மகள் 1 மகன் வாரிசுகள் எனது மகள் MSC, B.Ed படித்துள்ளார். நானும் 1 ஆம் வாதியும் எங்களது மூல ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் கிராம நிர்வாக அலுவலரிடமோ அல்லது வட்டாட்சியரிடமோ அல்லது மாவட்ட ஆட்சியரிடமோ இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்துள்ளேனா என்றால் அனைவரிடமும் தெரிவித்துள்ளேன். அந்த நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1993 ஆம் ஆண்டு எனக்கு என் தந்தை ஆவணம் எழுதிக் கொடுக்கும் போது என்னுடன் இருந்தாரா அல்லது தனியாக இருந்தாரா என்றால் என்னுடன் கூட்டு குடும்பமாக இருந்தோம். நான் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் உள்ள வீட்டில் தான் நாங்கள் அனைவரும் வசித்தோம் என்றால் சரிதான்.

6. எனது தந்தை 3/164 இல் வசித்ததாகவும் நான் 3/159 வசித்ததாகவும்தான் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் உள்ளது என்றால் இரண்டு வீடுகளும் எதிர் எதிர் வீடுகளாக தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சங்கதிகள் அனைத்தும் நேரடியாக தெரியும் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் 1ம் வாதியின் ஆவணத்தையே பார்க்கவில்லை என்று

சாட்சியம் அளித்துவிட்டு தடம் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியின் கிரைய பத்திரத்தில் மேல்புறம் உள்ள தென்வடல் கிழமேல் இட்டேரி தடத்தில் 1ம் வாதி சுக்கிர செட்டியார், கந்தசாமி செட்டியார், ஆகியோர் நடந்துகொள்ள பாத்தியம் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தில் உள்ளவாறு நடைமுறையில் இல்லை. வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் 29.11.2017ல் வழக்கு சொத்து நாச்சிமுத்து கவுண்டரின் தடம் என்று உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 1918ல் கிரைய பத்திரத்தில் தாவா தடம் சே.கருப்ப கவுண்டர் பூமிக்கு போக அவருக்கு சேர்ந்த தனிப்பட்ட தடம் என்று உள்ளது என்றால் சரியல்ல. அது பொதுத்தடமாக தான் மேற்படி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. க.சா.எண். 736 வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் மட்டும் பாத்தியப்பட்ட சொத்தா அல்லது வேறு நபர்களுக்கும் பாத்தியப்பட்ட சொத்தா என்றால் அனைவருக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட சொத்துதான். அனைவருக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் மற்ற நபர்களை ஏன் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் பிரதிவாதிகள் பொதுத்தடத்தை சொந்தம் கொண்டாடுவதால் அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம். க.சா எண். 736ல் எனக்கும் கதிர்வேலுக்கும் எந்த சொத்தும் இல்லை என்றால் அது பொது தடம் அந்த தடத்திற்கு மேற்கில் கதிர்வேல் விடும் அதை ஒட்டி எனது வீடும் உள்ளது. க.சா.எண். 738 மற்றும் 739 காலைகளில் எங்களுக்கு உரிமை உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. க.சா.எண். 736/8 மற்றும் 736/9 பொது தடம் என்று கூறும் நான் எனது ஆவணத்திலும் 1ம் வாதியின் ஆவணத்திலும் அவ்வாறு பொது தடம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் பட்டாவிலும் வரைபடத்திலும் அரசு ஆவணங்களிலும் பொது தடம் என்று உள்ளது. எனது கிரையா ஆவணத்தில் பொது தடம் என்று இல்லை என்றால் கிரைய ஆவணத்தில் அவ்வாறு இருக்க தேவையில்லை. வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தில் 1ம் வாதியின் சொத்தில் சுக்கிர செட்டியார், கந்தசாமி செட்டியார் ஆகியோர்களுக்கு மேற்கே தடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது 100 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது தற்போது நடைமுறையில் இல்லை, 736/8 மற்றும் 736/9 காலைகளை தான் பொது தடமாக அனைவரும் பயன்படுத்தி வருகிறோம்.

7. மேற்படி கிரையப்பத்திரம் 2017 ஆம் ஆண்டு தான் எழுதப்பட்டுள்ளது என்பதால் நான் சொல்வது சரியல்ல என்றால் எங்கள் பங்காளிகள் அவ்வாறு தான் உபயோகித்து வந்தார்கள் அவர்களுக்குள் தற்போது தான் பாகப்பிரிளை ஏற்பட்டது. 736/8 மற்றும் 736/9 காலைகளின்

கிழக்கு 1ம் வாதியின் சொத்தான இவ்வழக்கு சொத்து அமைந்துள்ளது என்றால் 1ம் வாதியின் வீடு தடத்தின் மேல் தான் உள்ளது. 1ம் வாதிக்கு வழக்கு தடமானது மிகவும் அத்தியாவசியம் என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 736/8 மற்றும் 736/9 காலைகளில் சென்றுதான் நாங்கள் எங்கள் கட்டிடங்களை பராமரிக்க இயலும் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு வடக்கே கிழமேல் வீதி உள்ளது என்றால் சரிதான், அதற்கு செல்வதற்கு இந்த 4 மூல தடத்தை தான் நான் செல்ல வேண்டும். நான் பிரதிவாதி வீட்டிற்கு வடக்கே 23.2 மீட்டர் மற்றும் 76.50 அடி நீளத்தில் வீடு கட்டி உள்ளேன் என்றால் சரிதான். நான் சரியான அளவுகளில் தான் வீடு கட்டி உள்ளேன் அதற்கான ஆவணங்கள் என் வசம் உள்ளது. எனது ஆவணத்தில் தென்வடல் 60 அடியாகவும், கிழமேல் 32 அடியாகவும் உள்ளது என்றால் பத்திரப்படி அவ்வாறு இருந்தாலும் அந்த இடம் கிராஸ் ஆக உள்ளதால் முன்ன பின்ன சரி செய்து பத்திரத்தில் உள்ள சதுர அடிக்கு வீடு கட்டி உள்ளேன். 1972ல் எனது தந்தை கிரயம் பெற்றபோது தென்மடல் 30 மூலம் என்றும் கிழமேல் 16 மூலம் என்றும் தான் கண்டு வாங்கி உள்ளார் என்றால் அந்த கட்டிடம் எனது தந்தை கிரயம் பெறுவதற்கு முன்பு பல ஆண்டுகளாக அங்கு உள்ளது, அது 120 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. 1 மூலம் என்பது 1 1/2 என்பதால் 1993 ஆம் ஆண்டு எனது அப்பா எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது மனைவி அரசு அலுவலராக பணி புரிந்ததை பயன்படுத்தி அளவுகளை அதிகமாக போட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.